பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 87

வெள்ளிக்கிழமை
21 பெப்ரவரி 2025

மாசி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## கைது!

யாழ்ப்பாணம், பெப். 21
யாழ்ப்பாணம் கொழும்புத்துறை இலந்தைக்குளம் பகுதியில் நீண்டகாலமாகப் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட் 11



# சர்வதேச நீதியே எமக்குத் தேவை

## காணாமலாக்கப்பட்டோருக்காக நெருப்பேந்தி தாய்மார் போர்!

**யாழ்ப்பாணம், பெப்ரவரி 21**
காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரியும், இந்த விடயத்தில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம் இடம்பெற்றுள்ளது. 11

தையிட்டி திஸ்ஸவிகாரை

## வாக்குமூலம் பெறுவதற்கு காக்கவைத்தது பொலிஸ்

யாழ்ப்பாணம், பெப். 21
தையிட்டி திஸ்ஸவிகாரைக்கு எதிரான போராட்டம் தொடர்பாக, வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டவர்கள், பொலிஸாரால் நீண்டநேரம் காத்திருக்க வைக்கப்பட்டுள்ளனர். 11

## மின்சாரம் தாக்கி முதியவர் இறப்பு

கிளிநொச்சி, பெப். 21
கிளிநொச்சி அக்கராயன்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், மின்சாரம் தாக்கி 83 வயதுடைய முதியவர் 11

## தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை!

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு

கொழும்பு, பெப். 21
நாட்டில் தேசியப் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த 11



## செம்மணி மனித எச்சம்: பார்வையிட்டார் நீதவான்

யாழ்ப்பாணம், பெப். 21
அரியாலை செம்மணியில் அமைந்துள்ள சிந்துபாத்தி மயானத்தில் அண்மையில் மீட்கப்பட்ட மனித எச்சங்களை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ. ஆனந்தராஜா நேற்று நேரடியாகப் பார்வையிட்டார். சிந்துபாத்தி மயானத்தில் மண்டபம் அமைக்க நல்லூர் பிரதேச சபையினரால் அண்மையில் குழிகள் வெட்டப்பட்டபோதே மேற்படி மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந் 11

வடக்குப் பாடசாலைகளுக்கு

## சிவராத்திரிக்கு மறுநாள் விடுமுறையாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 21
வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் மஹா சிவராத்திரிக்கு மறுநாளான பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவித்துள் 11

காடையர்கள் அடாவடி

## முன்னாள் அதிபர் அடித்துக் கொலை




யாழ்ப்பாணம், பெப். 21
சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்களப்புப் பகுதியில் கடந்த சனிக்கிழமை போதையில் நின்ற காடையர்கள் குழுவொன்று தாக்குதல் நடத்தியதில் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த முன்னாள் 11

முகமாலையில்

## கடையொன்றின் மீது நேற்று பெற்றோல்குண்டுத் தாக்குதல்

கிளிநொச்சி, பெப். 21
முகமாலை வடக்குப் பகுதியில் உள்ள கடையொன்றின் மீது பெற்றோல் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று அதிகாலையே இந்தத் தாக்குதல் நடத்தப் 11



முச்சந்தி முராரி

'எங்க பார்த்தாலும் சாவும், கொலையும், புதைகுழியுமாவெல்லோ கிடக்கு'

வித்தியா கொலைவழக்கு

## சுவிஸ்குமார் தப்பிக்க உதவிய ஜெயசிங்க, ஸ்ரீகஜனுக்கு சிறை

வவுனியா மேல்நீதிமன்றம் அதிரடி

வவுனியா, பெப். 21
புங்குடுதீவு மாணவி வித்யா படுகொலை வழக்கின் முதன்மை சந்தேகநபர் சுவிஸ்குமாருக்கு அடைக்கலம் கொடுத்த குற்றத்துக்கு முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன் ஆகிய இருவருக்கும் தலா நான்கு ஆண்டுகள் 11

எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியை

## நுண்ணாய்வு செய்ய நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், பெப். 21
செம்மணி - சிந்துபாத்தி மயானத்தில், மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில் நுண்ணாய்வை மேற்கொள்ளுமாறு யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற நீதிபதி 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹண ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 20.02.2025 | திகதி 20.02.2025 | திகதி 20.02.2025 | திகதி 20.02.2025 | திகதி 20.02.2025 | திகதி 20.02.2025 | திகதி 13.02.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 3995 | சீட்டிழுப்பு இலக்கம் 1062 | சீட்டிழுப்பு இலக்கம் 021 | சீட்டிழுப்பு இலக்கம் 2101 | சீட்டிழுப்பு இலக்கம் 5753 | சீட்டிழுப்பு இலக்கம் 1783 | சீட்டிழுப்பு இலக்கம் 328 |
| ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கினம் மேடம் | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து Z | ஆங்கில எழுத்து M | ஆங்கில எழுத்து K | ஆங்கில எழுத்து M |
| வெற்றி இலக்கங்கள் 23 49 62 80 | வெற்றி இலக்கங்கள் 09 17 47 52 | வெற்றி இலக்கங்கள் 3 8 6 1 | சுப்பர் இலக்கம் 22 | வெற்றி இலக்கங்கள் 5 6 4 6 3 5 | வெற்றி இலக்கங்கள் 01 46 68 74 | வெற்றி இலக்கங்கள் 4 6 3 5 |
| விசேட எழுத்து H | | | வெற்றி இலக்கங்கள் 06 20 35 46 | | விசேட எழுத்து K | |

# கல்விப்புலம் மீதான வன்முறை நீதி கிடைக்காவிடின் போராட்டம்

*இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு*

**யாழ்ப்பாணம்,பெப். 21**

**அதிபர், ஆசிரியர்கள் மீது கொடூரமான முறையில் கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகளுக்கு எதிராக விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளத் தவறும் பட்சத்தில் தொழிற்சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் தீபன் திலீசன் தெரிவிக்கையில், கிளிநொச்சி பூநகரி மத்திய கல்லூரியின் தற்போதைய அதிபரும், ஓய்வு பெற்ற முன்னாள் அதிபரொருவரும் கடந்த சனிக்கிழமை பூநகரியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி இரவுவேளை பயணித்துக்கொண்டிருந்தபோது தனங்கிளப்புக்கு அண்மித்த பகுதியில் நிறைபோதை யில் வந்த காடையர் குழுவொன்றால் கொடூரமான முறையில் தாக்கப்பட்ட நிலையில் ஓய்வு பெற்ற அதிபர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கல்விப்புலத்துக்கு தலைக்குனிவாகும்.

அத்துடன் கடந்த சில நாள்களுக்குமுன்னர்முல்லைத்தீவிலிருந்து, யாழ்ப்பாணம் நோக்கி ஆசிரியர்கள் பயணித்த வாகனம் மீது கல்வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் வடமாகாண ஆளுநர் செயலகம், ஆசிரியர்கள் பயணித்த வாகனத்தின்மீது சட்டவிரோதமாக தாக்குல் நடத்தியோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இன்று ஒரு கல்வியலாளரின் உயிர் பறிக்கப்படுமளவுக்கு நிலைமை சென்றுள்ளது. இது இலங்கையில், குறிப்பாகத் தமிழ்ப் பகுதிகளில் சாதாரண மக்கள் கூட பாதுகாப்பாக பயணிக்கமுடியாது என்ற நிலையையே வெளிப்படுத்தி நிற்கிறது. இத்தகைய சம்பவங்களை அரசாங்கம் வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பது வன்மையான கண்டனத்துக்குரியது. எனவே கல்விச் சமூகத்தின் மீது கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறைகளுக்கு எதிராக விரைவில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள தவறும் பட்சத்தில் தொழிற்சங்க செயற்பாடுகளை மேற்கொள்வோம் - என்றார். (ச-125)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 20.02.2025 | வியாழக்கிழமை | 0461 | S | 5 7 4 1 1 6 |

**Super Ball**

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 20.02.2025 | வியாழக்கிழமை | 2727 | N | 06 35 39 56 |

**சனிதா**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 20.02.2025 | வியாழக்கிழமை | D | 14 54 67 76 | 4888 |

**SASIRI**

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 20.02.2025 | வியாழக்கிழமை | 0626 | 14 48 50 |

**லக்ன ராசி**

| திகதி | தினம் | மேடம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 20.02.2025 | வியாழக்கிழமை | ♈ | 11 15 25 57 | 4439 |

**KAPRUKA**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 20.02.2025 | வியாழக்கிழமை | Z | 32 | 13 38 46 68 | 1903 |

**அத கோடிபதி**

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 20.02.2025 | வியாழக்கிழமை | H | 06 15 28 49 | 2553 |

## அநாதரவாக சஞ்சீவவின் சடலம்

கொழும்பு,பெப்.21

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நேற்றுமுந்தினம் புதன்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட பாதாள உலக கும்பலைச் சேர்ந்த கனேமுல்ல சஞ்சீவவின் சடலத்தைப் பொறுப்பேற்க எவரும் முன்வரவில்லை என்று வாழைத்தோட்டம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கனேமுல்ல சஞ்சீவவின் மனைவியும் அவரது சடலத்தைப் பொறுப்பேற்றுக்கொண்டு செல்ல முன்வரவில்லை.

இதனால் அவரின் சடலம் பொலிஸ் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

நீதிமன்றத்தில் துப்பாக்கிச்சூடு

## பெண் சந்தேகநபர் பற்றி தகவல் தந்தால் சன்மானம்





கொழும்பு,பெப்.21

கனேமுல்ல சஞ்சீவ கொலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியவருக்கு உதவிய, பெண் சந்தேகநபரை அடையாளங் காண பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர்.

குறித்த பெண்ணின் பெயர் இஷாரா செவ்வந்தி என்றும் அவர் 25 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பெண் தொடர்பான தகவல்களை கொழும்பு குற்ற விசாரணைப்பிரிவின் பணிப்பாளரின் அலைபேசி இலக்கமான 071 8591727 அல்லது பொறுப்பதிகாரியின் 071 8591735 என்ற அலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த பெண் தொடர்பில் தகவல்களை வழங்குவோருக்கு பணப்பரிசு வழங்கத் தயாராக உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## புதுக்கடை நீதிமன்ற சம்பவத்தின் பின்னணி பகிரங்கப்படுத்தப்படும்

*பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு, பெப்.21

புதுக்கடை நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, சம்பவத்தின் பின்னணி பகிரங்கப்படுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுந்தினம் நடைபெற்ற வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பாதாளக் குழுக்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதால் அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்க ஒரு தரப்பு முயற்சிக்கின்றது. இந்த அழுத்தங்களுக்கு நாம் அடிபணியப்போவதில்லை. அனைத்து விசாரணைகளும் முறையாக முன்னெடுக்கப்படும். நீதிமன்றம் சுயாதீனமாகச் செயற்படுவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். அதேபோல் பொலிஸ் விசாரணைகளும் முறையாக முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய சம்பவங்களின் உண்மை வெகுவிரைவில் வெளிவரும் - என்றார். (எ-இ)

## கொலையாளி பயணித்த வாகனச்சாரதி கைது

கொழும்பு,பெப்.21

ககேமுல்ல சஞ்சீவ கொலைச்சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் தப்பிச்செல்ல உதவிய ஹைஏஸின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார். பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் நேற்று இதனைத் தெரிவித்தார்.

பிரதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் புத்தளம் பாலவிப் பகுதியில் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சகல அரசு நிறுவனங்களிலும் உள்ளகச் செயற்பாட்டுப் பிரிவு

**கொழும்பு,பெப்.21**

**சகல அரசு நிறுவனங்களிலும் ஒரு உள்ளகச் செயற்பாட்டுப் பிரிவை புதிதாக அமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**

அரச நிறுவனங்களுக்குள் ஊழலைத் தடுப்பது, ஒழுங்குமுறைப் பண்பாட்டை மேம்படுத்துதல், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதி செய்தல், நெறிமுறையுடன் நிர்வாகத்தை மேம்படுத்துதல், இலஞ்ச ஊழல் ஆணையத்துடன் இணைந்து சட்டத்தை நடைமுறைப்படுத்த உதவுதல் என்பவற்றை நோக்காகக் கொண்டு இந்த விசேடபிரிவு உருவாக்கப்படவுள்ளது.

முதற்கட்டமாக, அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண பிரதான செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் தலைமையிலான அலுவலகங்களில் இந்தப் பிரிவு உருவாக்கப்படவுள்ளது. இதுதொடர்பாக, அமைச்சுச் செயலாளர்கள், மாகாணப் பிரதான செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களுக்கு ஜனாதிபதி செயலாளரால் எழுத்துமூல சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)




**களை பிடுங்காப் பயிர் காற்பயிர் எண்டுவினம். இப்ப எங்களுக்குள்ள களையள்தான் கூடிப் போட்டுது. அதால களை எது பயிர் எது எண்டு கண்டுபிடிக்கிறது கஷ்டம். முந்தநாளும் லோயர் மாதிரி வேசம் போட்டுப் போனவன்தானே கோர்ட்டுக்குள்ள சுட்டுப்போட்டு ஓடினவன். அதால ஆக்களை அடையாளம் காண, தனித்து வமா ஏதும் இருந்தால் சனமும் அதுக்கேத்தபடி அறிஞ்சு நடக்கலாமெல்லோ. யாழ்ப்பாணத்தில எப்பவும் மினிபஸ்காரரும், சீ.ரி.பி.பஸ்காரரும் கீரியும் பாம்பும்தான். ரேஸ் ஓடுறது, மற்றபஸ்ஸை முந்த விடாமல் நடுறோட்டால ஓடி வித்தை காட்டு றது. சனத்தை ஏத்தாமல் தங்கட ரேஸில கவனமா இருக்கிறது. இடைவழியில இறங்கி அடிபடுறது எண்டு எப்பவும் ஏதோ ஒரு பிரச்சினை வந்து கொண்டே இருக்கும். இதால பஸ்களில போய் வாற சனத்துக்கும் கரைச்சல். அதைப்பற்றி அவை முறைப்பாடு செய்யலாமெண்டாலும் சில வேளையளில எந்த லைன் பஸ்காரர் ஆரோட பிரச்சினைப்பட்டவை எண்டு சாதாரண சனத்துக்குத் தெரியாது. அதால அவையும் பேசாமல் போடுவினம்.**

**இப்பிடியான பிரச்சினையளுக்குத் தீர்வுகாணுறமாதிரி தங்களை அடையாளப்படுத்திறமாதிரி ஒரு நல்லவேலையைச் செய்திருக்கு பருத்தித்துறை மினிபஸ் சங்கம். யாழ்ப்பாணத்துக்கும் பருத்தித்துறைக்கும் இடையில லைன் ஓடுற மினிபஸ்காரர் எல்லாருக்கும் யுனிபோர்ம்(சீருடை) குடுத்திருக்கினம். அதால இனி அவையை எங்க கண்டாலும் 'பருத்தித்துறை மினிபஸ்காரர்' எண்டு ஆரும் அடையாளம் கண்டுபிடிக்கலாம். அவை சனத்துக்கு நல்லது செய்தாலோ இல்லாட்டி ஏதும் கொழுவல் எடுத்தாலோ இந்த பஸ் சங்கக்காரர் எண்டு தெரியும். அதால சனத்தோடையோ இல்லாட்டி வேற ரூட் ஓடுற பஸ்காரரோடையோ இந்தப் பருத்தித்துறை மினிபஸ்காரர் தேவையில்லாமல் தனகுப்படவும் மாட்டினம். இப்பிடிக் கன பிரச்சி னைக்கு இந்த யுனிபோர்ம்தான் மருந்து.**

**எண்டாலும் சில மினிபஸ்காரர் தாங்கள் இந்த யுனிபோர்ம் போடமாட்டம் எண்டு அடம்பிடிக்கினம். 'யுனிபோர்ம் போட்டு பஸ் ஓடுறதுக்கு நாங்களென்ன பள்ளிக்கூடப் பிள்ளையளோ? இவ்வளவு நாளும் யுனிபோர்ம் இல்லாமல் பஸ் ஓடுப்படேலையோ?' எண்டு கேக்கினமாம். இப்பிடி யுனிபோர்ம் போட்டால், தாங்கள் என்ன கூத்தடிச்சாலும் அது இன்னார்தான் செய்ததெண்டு தெரிய வந்திடும் எண்டு அவை பயப்பிடுகினமோ தெரியேலை. உண்மையில ஒரு நல்லவேலையை பருத்தித்துறை பஸ்சங்கம் செய்திருக்குது. அதைப் பார்த்து மற்ற மினிபஸ் சங்கங்களும் செய்தால் சனத்துக்கும் உதவியா இருக்கும். இதையெல்லாம் போக்குவரத்துக்குப் பொறுப்பா இருக்கிற திணைக்களங்களும், ஆணைக்குழுவும்தான் செய்திருக்கோணும். அவையே செய்ய நினைக்காத வேலையை ஒரு சங்கம் செய்திருக்கெண்டது அந்தச் சங்கம் சனத்திலையும், தங்கட பஸ்காரரிலையும் எவ்வளவு அக்கறையா இருக்கெண்டதைத்தான் காட்டுது. இந்த மினிபஸ் சங்கத்தைப் பார்த்தாவது திணைக்களகாரருக்கும், ஆணைக்குழுக்காரருக்கும் புத்தி வருகுதோ எண்டு பாப்பம்.**

padsi@uthayan.com - பட்சி

# வாய்ப்புற்றுநோய் நாட்டில் உயர்வு

கொழும்பு,பெப்.21

இலங்கையில் நாளாந்தம் மூன்று முதல் நான்கு பேர் வாய்ப் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர் என்று வாய்ப்புற்றுநோய் நிபுணர் மருத்துவர் ஆனந்த ரத்நாயக்க தெரிவித்துள்ளார். ஒவ்வொரு வருடமும் இலங்கையில் 2,000 முதல் 3,000 வரையிலான வாய்ப்புற்றுநோயாளர்கள் கண்டறியப்படுகின்றனர்.

அதேவேளை, பாடசாலை மாணவர்கள் மத்தியில் வாய்ப்புற்றுநோய்க்குரிய ஆரம்ப அறிகுறிகள் காணப்படுகின்றன என்றும் மருத்துவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# 184,9262 பேருக்கு நாய்க்கடி

கடந்த வருடம் 184,926 பேர் நாய் கடிக்குச் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். நாய்க் கடிக்கு சிகிச்சையளிப்பதற்காக அரசாங்கம் 850 முதல் 1,000 மில்லியன் ரூபா வரை செலவிட்டுள்ளது. கடந்த வருடம் கம்பஹா மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நாய்க்கடிச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# வடக்குக் கடற்பரப்பில் நேற்று 10 இந்திய மீனவர்கள் கைது

யாழ்ப்பாணம்,பெப். 21

இலங்கைக் கடற்படைக்குள் வெவ்வேறு இடங்களில் எல்லைதாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நேற்று 10 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களது விசைப்படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.



அதன்படி தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவர்கள் ஒரு படகுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமத்திய மாகாணக் கடற்படையினரின் கூட்டு நடவடிக்கையின்போதே அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அதேவேளை யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஆறு இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது இரண்டு படகுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதுசெய்யப்பட்ட மீனவர்களைக் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கக் கடற்படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-56,20)

# போதைமாத்திரை விற்பனை யாழில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம்,பெப்.21

போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் அதிகாரியின் கீழ் இயங்கும் விசேட புலனாய்வுப் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின்போதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 30 போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. குறித்த சந்தேகநபர் கொழும்புத்துறை இலந்தை குளம்பகுதியில் நீண்டகாலமாக போதைமாத்திரை விற்பனையில் ஈடுபட்டுவந்தாரெனத் தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-20,23)




முதன்முறையாக

# பலாலி விமான நிலையத்திலிருந்து சென்னைக்கு வாடகை விமானம்!

கொழும்பு.பெப்.21

வரலாற்றில் முதற்தடவையாக பலாலி விமான நிலையத்திலிருந்து சென்னைக்கு வாடகைக்கு விமானத்தை அமர்த்தும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா விமான சேவைகள் தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது. நேற்றுமுன்தினம் சென்னை விமான நிலையத்திலிருந்து ஒரு தொகுதி பயணிகள் வாடகை விமானம் மூலம் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர். இதன் மூலம் சுற்றுலாத்துறை மேலும் வளர்ச்சியடையும் என ஸ்ரீலங்கா விமான சேவைகள் தனியார் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். அதிகாரிகளால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**இடபம்:** உற்சாகமான நாளாக இருக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பயணத்தால் அனுகூலம் உண்டாகும். ஆபரணங்களின் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். எதிரிகளின் தொல்லைகள் நீங்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். செலவுகள் ஏற்படும்.

**கடகம்:** மகிழ்ச்சி தரும் நாள். புதிய முயற்சிகளை காலையிலேயே தொடங்கிவிடுவது நல்லது. வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**சிம்மம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும் நாளாக இருக்கும். துணிச்சலாக முடிவெடுப்பீர்கள். அதனால் நன்மையே ஏற்படும். எதிர்ப்புகளும் விமர்சனங்களும் நீங்கும். பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கன்னி:** மகிழ்ச்சியான நாள். குடும்பப் பொறுப்புகளில் உற்சாகமாக ஈடுபடுவீர்கள். உங்கள் முயற்சிக்கு பெற்றோரின் ஆதரவு கிடைக்கும். ஆதாயம் உண்டாகும். அலுவலகப் பணிகளில் சக ஊழியர்கள் உதவி செய்வார்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்கள் வருகையால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பொறுமையுடன் அணுகுவது நல்லது. தாயாரின் உடல்நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம் :** மனதுக்கு மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் நிகழும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** எதிர்பார்த்த பணவரவு இருந்தாலும், எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் நலனில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். கருத்துவேறுபாடு நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கும்பம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்குத் திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதுவும் இன்றைக்கு எடுக்கவேண்டாம்.

**மீனம்:** உற்சாகமான நாள். தொட்ட காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பாராத ஆதாயம் ஏற்படக்கூடும்.

# ‘ஆயுசு 100’ யோகா யாழில் அங்குரார்ப்பணம்





யாழ்ப்பாணம், பெப். 21

சிகரம் நிறுவனத்தின் படலை: சுற்றுலா சேவைப் பிரிவு, யாழ். பண்ணை ஆரோக்கிய சதுக்கம் பகுதியில் நடத்திவந்த யோகாசனப் பயிற்சிகளின் ஓராண்டு நிறைவை முன்னிட்டு, "ஆயுசு 100 - பரிபூரண நலவாழ்வு மையம்" என்ற புதிய முயற்சி ஒன்றை ஆரம்பித்துள்ளது. அதன் அறிமுக நிகழ்வு யாழ்ப்பாணம் தனியார் விடுதியொன்றில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சூரியகுமார், யோகாசனப் பயிற்றுவிப்பாளர் சித்த வைத்தியர் ஜெ.ரத்னலகி, பண்ணை ஆரோக்கிய சதுக்கம் யோகக்கலை ஆசான் சித்த வைத்தியர் தி.இராகுலன், சக பயிற்றுவிப்பாளர் சித்த வைத்தியர் தர்சினி உள்ளிட்டோருடன் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீட பேராசிரியர், யாழ்.போதனா மருத்துமனை நோய்த்தடுப்புப் பிரிவு மருத்துவர், யாழ் .பல்கலைக்கழக முகாமைத்துவபீட பிரதிப் பதிவாளர், சித்த மருத்துவ பீட பிரதிப் பதிவாளர், வடக்கு மாகாண சுற்றுலா சேவைப் பணியக முகாமைத்துவசபை உறுப்பினர்கள், வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றிய பிரதித் தலைவர், யாழ் முன்னணி உல்லாச விடுதிகளின் சிரேஷ்ட பணியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் தொடர்ச்சியாக நாளை சனிக்கிழமை தமிழர் பாரம்பரிய விளையாட்டுகள், பாரம்பரிய உணவு வகைகள், யோகாசனம், சும்பா நடனம், கர்நாடக சங்கீதம், மெல்லிசை, பொப் இசைப் பாடல்கள் போன்ற திறந்தவெளி நிகழ்வுகள் யாழ் . பண்ணைப் பகுதியில் நடைபெறவுள்ளன. (ச-25)

# நினைவுகூரல்



யாழ்ப்பாணம், பெப். 21

தமிழ் மேடை நாடகத்துறை மற்றும் திரைப்படத் துறையில் உச்சம் தொட்ட கலைவேந்தன் ஸ்ரீசங்கரின் 45 ஆவது நினைவஞ்சலி நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வை அவரது சிஷ்யரும் நண்பருமான எம்.சண்முகராஜா ஏற்பாடு செய்துள்ளார். (ச- 25)

# மன்னாரை அலங்கரிக்கும் வெளிநாட்டுப் பறவைகள்

மன்னார்,பெப்.21

மன்னார் மாவட்டத்துக்கு ஆண்டுதோறும் வருகைதரும் புலம்பெயர் பறவைகள் இம்முறையும் மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில் குவிந்துள்ளன.

இம்மாதம் ஆரம்பத்தில் இருந்து வெளிநாட்டுப் பறவைகளின் வரவு மன்னார் மாவட்டத்தில் காணப்படுகிறது. எனினும் கடந்த ஆண்டுகளைவிடவும் இம்முறை பறவைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது என்றும் காற்றாலைச் செயற்றிட்டமே பறவைகளின் வருகைக்கு வீழ்ச்சிக்குக் காரணம் என்றும் உள்ளூர் மக்கள் தெரிவிக்கின்றனர். (ச-33-56)





# பாடநூல் கண்காட்சியும் சஞ்சிகை வெளியீடும்

யாழப்பாணம், பெப். 21

யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறையின் ஏற்பாட்டில், ‘கலைஞானம்’ சஞ்சிகை வெளியீடும் பாடநூல் கண்காட்சியும், பாடநூலாக்க புலமைத்துவ கலந்துரையாடலும் கைலாசபதி கலையரங்கம் மற்றும் கல்வியியல் துறை விரிவுரை மண்டபம் ஆகியவற்றில் நாளை சனிக்கிழமை மற்றும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளன.

கண்காட்சி காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

கல்வியியல் துறை தலைவர் கலாநிதி ஆ.நித்திலவர்ணன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராசா, சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், கௌரவ விருந்தினர்களாக கல்வியியல் துறையின் ஓய்வுநிலைப் பேராசிரியர்களான க.சின்னத்தம்பி, கலாநிதி.சபா. ஜெயராசா, மா.சின்னத்தம்பி, கலாநிதி.திருமதி அ.சத்தியசீலன், கலாநிதி.திருமதி ஜெ.இராசநாயகம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

விடாமுயற்சியானது குறைத்து மதிப்பிடமுடியாத ஒரு நல்லொழுக்கமாகும்.


– பாப் ரிலே–

# அழிக்கப்படும் சாட்சிகள்

நாட்டில் சமீபகாலத்தில் அதிகரித்திருக்கும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அதீத கவலையை ஏற்படுத்தியிருக்கின்றன. கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்துக்குள் சாட்சிக்கூண்டில் இருந்த சந்தேகநபர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. துப்பாக்கிதாரிகளால் இலக்கு வைக்கப்படுபவர்கள் பெரும்பாலும் கடந்த காலங்களில் குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர்களாகவும், பாதாள உலகத் தொடர்புகளைக் கொண்டவர்களாகவும் இருக்கின்றனர். ஆகையால் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கு பாதாள உலகக் குழுக்களிடையிலான அதிகார மோதல் காரணமாக இருக்கலாம் என்பது இயல்பாகவே தோன்றும் எண்ணம். பொலிஸாரும் இத்தகைய சம்பவங்களுக்குக் கூறும் காரணமும் இதுவே. ஆனால் இத்தகைய சூட்டுச் சம்பவங்கள் உண்மையில் அதிகாரப் போட்டிக்காகவே நடத்தப்படுகின்றன என்று அடித்துக்கூறிவிடமுடியாது. அதிகாரப் போட்டிக்காக நீதிமன்றத்துக்குள் நுழைந்து சாட்சிக் கூண்டுக்குள் இருப்பவரை இலக்கு வைக்கும் அளவுக்குத் துணிவார்களா என்பதும் சிந்திக்க வேண்டிய ஒன்று.

கடந்தகாலங்களில் பாதாளக் உலகக் குழுக்கள் அரசாங்கங்களில் இருந்தவர்களின் பின்புலத்துடனேயே குற்றச்செயல்களை அரங்கேற்றியிருந்தன என்பது அனைவரும் அறிந்த பரகசியம். அரசியல் பலம் இல்லாது பாதாள உலகக் குழுக்களால் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களை மேற்கொண்டிருக்க முடியாது. அரசியல்வாதிகள் தங்களுக்குத் தேவையானதை, தங்களின் அரசியல் இருப்புக்கு ஆபத்தானவற்றைக் கையாள்வதற்கு இவ்வாறான பாதாள உலகக் குழுக்களையே பயன்படுத்தியிருந்தனர். இந்த இரு தரப்புகளுக்கு இடையிலான உடன்பாடே நாட்டில் போதைப்பொருள் வியாபாரம் செழிப்படைவதற்கும், குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்கும் முதற்காரணமாகவும் இருக்கின்றது.

இப்போது துப்பாக்கிச் சூடுகளுக்கு இலக்காகி இறப்பவர்களில் பெரும்பாலானோர் கடந்த காலங்களில் இவ்வாறான குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்றே கூறப்படுகின்றது. கத்தி எடுத்தவன் கத்தியால்தான் சாவான் என்று இந்தக் கொலைச்சம்பவங்களைக் கடந்து சென்றாலும், இந்தச் சம்பவங்களில் கொல்லப்படுபவர்கள் கடந்தகாலங்களில் நாட்டில் நடந்த பல முக்கியமான குற்றச் சம்பவங்களின் சாட்சியங்கள் என்பதையும் மறந்துவிடக்கூடாது. இவ்வாறான கொலைகளின் ஊடாகக் கடந்த காலங்களில் நாட்டில் நடந்த கொலைகள் உட்பட குற்றச்செயல்களின் பின்னணியில் இருப்பவர்கள் காப்பற்றப்படுகின்றனர் என்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி மறுக்கப்படுகின்றது என்பதும் நிதர்சனமானது. இவ்வாறான சம்பவங்கள் பாதாள உலகக் குழுக்களிடையிலான அதிகாரமோதல் என்று கடந்துவிடாது, இவற்றைத் தடுப்பதற்கு அவசியமான - கடுமையாக நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும்.



## உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடக்கும்!



ரில்வின் சில்வா தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.21**

**உள்ளாட்சிச்சபைத் தேர்தல் இயலுமான வரை கூடியவிரைவில் நடத்தப்படும் எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளதாக என ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-
உள்ளாட்சிசபைத் தேர்தல் தொடர்பில் எமது தரப்புக் கருத்துகள், தேர்தல் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டன. கடந்த காலங்களில் வேண்டுமென்றே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.
புதிதாக வேட்புமனு கோரும் சட்டத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும், மக்கள் மத்திக்கு செல்வதற்கு அஞ்சும் எதிரணிகள், சிற்சில காரணங்களைக்கூறி தேர்தலைப் பிற்போடுவதற்கு முற்படுகின்றனர். தோல்வி பயத்தாலேயே இப்படியான முயற்சிகள் இடம்பெறுகின்றன.
விரைவில் தேர்தல் நடத்தப்படும் என்ற தகவலைத் தேர்தல் ஆணைக்குழுவினர் எம்மிடம் தெரிவித்தனர். பொதுத்தேர்தலை நாம் எவ்வித ஆரவாரமும் இன்றி அமைதியாக நடத்தினோம். எனவே, நீதியான முறையில் அமைதியான தேர்தலை நடத்துவதற்குரிய சூழலை நாம் ஏற்படுத்துவோம்-என்றார். (எ-44)

## உள்ளூராட்சிமன்ற பதவிக்காலம் ஜூன் 2 இல் ஆரம்பம்

கொழும்பு, பெப்.21
இலங்கையிலுள்ள 274 உள்ளூராட்சி மன்றங்களினதும் அதிகாரபூர்வ பதவிக்காலம் ஜூன் 2ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இதுதொடர்பிலான வர்த்தமானி பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.
இந்த வர்த்தமானி அறிவித்தல் 274 பிரதேச சபைகள், 27 மாநகர சபைகள் மற்றும் 36 நகரசபைகள் உட்பட மொத்தம் 337 நிறுவனங்களுக்குப் பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## இலங்கை கொண்டுவரப்பட்ட ஹரக்கட்டா

கொழும்பு, பெப்.21
குற்றச்செயல்களில் ஈடுபட்ட பின்னர் இந்தியாவுக்குத் தப்பியோடிய நான்கு பேர் கைது செய்யப்பட்டு நேற்றுமுன்தினம் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர். ஹரக்கட்டா என்ற பிரபல போதைப்பொருள் வியாபாரியும் இந்த நான்கு பேரில் அடங்கியுள்ளார். இலங்கையின் வேண்டுகோளையடுத்து சர்வதேச பொலிஸ் இவர்களுக்கெதிராக சிவப்பு அறிவித்தல் விடுத்திருந்த நிலையில், இந்தியப் பொலிஸார் இவர்களைக்கைதுசெய்து இலங்கைக் குற்றத்தடுப்பு பிரிவினரிடம் ஒப்படைத்தனர். (எ-6)

## 700 தொன் பேரீச்சை சவூதி நன்கொடை

இலங்கை உட்பட உலகின் 102 நாடுகளுக்கு சவூதி அரேபியா 700 தொன் பேரீச்சம்பழங்களை நன்கொடையாக வழங்கவுள்ளது. எதிர்வரும் ரமழான் மாதத்தை முன்னிட்டு மன்னர் சல்மானின் பரிசாக இந்தப் பேரீச்சம் பழங்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

## பாடசாலை மாணவி ஹெரோய்னுடன் கைது

கொழும்பு.பெப்.21
அம்பலாங்கொடை குருந்துவத்தப் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருளுடன் பாடசாலை மாணவி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அம்பலாங்கொடையில் உள்ள அரசுப் பாடசாலையொன்றில் கல்விகற்கும் 17 வயதுடைய மாணவியே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
சனிக்கிழமை - மாசி - 10
22.02.2025
சுபநேரம் : 03.31 - 05.01
ராகுகாலம் : 9.31 - 11.01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1000 ஏக்கர் நிலப்பரப்பில் இம்முறை சிறுதானியம்!

## 27 மில்லியன் ரூபா ஒதுக்கீடு



**யாழ்ப்பாணம், பெப். 21**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த வருடம் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானியப்பயிர்ச்செய்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கென 27 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண விவசாயத் துறைப் பணிப்பாளர் சுகந்தினி செல்வக்குமரன் தெரிவித்துள்ளார். வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,
வயல் நிலங்களில் எஞ்சிய நீரைப் பயன்படுத்தி சிறுதானிய உற்பத்தியைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்வதற்கு நாம் திட்டங்களை வகுத்துள்ளோம்.
பயறு ,உளுந்து, எள்ளு, நிலக்கடலை போன்ற தானிய வகைகளை பயிரிடுவதற்கு விவசாயிகளை ஊக்குவிக்க உள்ளோம்.

இதேவேளை பாரம்பரிய பயிர்களான சாமை, திணை, வரகு, போன்ற பயிரினங்கள் பயிர்ச்செய்கையில் இருந்து விலகிவருகின்றன. எனவே பாரம்பரிய பயிர்களை ஊக்குவிக்கும் முகமாக விவசாயி களுக்கு விதைகளை வழங்கி சந்தை வாய்ப்பை ஏற்படுத்தவுள்ளோம். கடந்த வருடம் 9.6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.
எனினும் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கான நிதி கிடைக்கப்பெறுவதில் ஏற்பட்ட தாமதத்தால் குறித்த காலத்தில் சிறுதானியப் பயிர்செய்கையினை விவசாயிகளால் மேற்கொள்ளமுடியாத துரதிஷ்டநிலை ஏற்பட்டது. அதேவேளை கிளிநொச்சி மாவட்டம் சிறுதானியப் பயிர்செய்கையை வெற்றிகரமாக கடந்த வருடம் முன்னெடுத்திருந்தது. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 400 ஏக்கர் பயிர்ச்செய்கைக்கான நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்ட நிலையில் இவ்வருடம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் சிறுதானியப் பயிர்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது- என்றார். (ச-125)

# புனித பத்திரிசியார் கல்லூரி 175 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 21

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று கல்லூரியின் அதிபர் அருட்தந்தை திருமகன் தெரிவித்துள்ளார்.

அதன்படி "தொற்றா நோய்களைத்தடுத்தல்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நடைபவனி, சஞ்சிகை வெளியீடு, பழைய மாணவர்கள் இடையேயான கால்பந்து மற்றும் துடுப்பாட்டப் போட்டிகள், பாடசாலைகளுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. நிகழ்வுகள் இரண்டு கட்டங்களாக இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-25,125)



கொக்குவில் கிழக்கு ஐயப்பன் ஆலயத்தின் 25 ஆவது தைப்பூச விழா கடந்த வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது. சிறப்பு அபிஷேகப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. (ச-25. 66)



உடுவில் பிரதேச செயலகத்தின் சிறுவர், பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு யாழ். குப்பிழான் விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ச-41-66)



# மகளிர் அபிவிருத்திக் கண்காட்சி நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 21

வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில், வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்தின் மகளிர் அபிவிருத்தி நிலையக் கண்காட்சி நிகழ்வு, இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தமிழவேள் க.இ.க.கந்தசாமி ஞாபகார்த்த மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. வலிகாமம் தெற்குப் பிரதேச செயலாளர் பா. ஜெயகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிறிசலீஸ் நிறுவன செயற்றிட்ட முகாமையாளர் ம.பிரபாகரன், கௌரவ விருந்தினராகக் இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ந.நவநீசன் உட்பட பிரதேச செயலகப் பதவிநிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், பழைய மாணவிகள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ச-25)



# மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள விளையாட்டுப்போட்டி

வவுனியா, பெப். 21

மாற்றுத்திறனாளிகளுக்கான மாவட்ட மட்ட தடகள விளையாட்டுப்போட்டி வவுனியா ஜங்ஸ்ரார் ஸ்டார் விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் மாவட்டச் செயலாளர் சரத்சந்திர, மேலதிக மாவட்டச் செயலாளர் தி.திரேஸ்குமார், செட்டிகுளம் உதவிப் பிரதேச செயலாளர் தர்மேந்திரா, உதவி மாவட்டச் செயலாளர் சார்ஜா மற்றும் அரச உத்தியோகத்தர்கள், மாற்றுத்திறனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25.10)



இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் 'க்ளீன் சிறீலங்கா' வேலைத்திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கொடிகாமம் பொலிஸ் பிரிவின் போக்குவரத்து உப பொறுப்பதிகாரி த. தர்மரட்ணம் கலந்துகொண்டார். (ச-41-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிச்சூடு பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ளும்

## நீதியமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு

**கொழும்பு, பெப்.21**

**புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் பாரதூரமானது. இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, தீர்வை வழங்குவதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது என்று நீதியமைச்சர் ஹர்ஷன நாயணக்கார தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாது-

இது மிகப்பாரதூரமான விடயம். மிகவலுவான பாதுகாப்புக்கு மத்தியில்தான் 'கனேமுல்ல சஞ்சீவ' அழைத்துவரப்பட்டார். இச் சம்பவம் தொடர்பில் நாம் பொறுப்பேற்றுக்கொள்வதுடன், இது தொடர்பாக வெகுவிரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை எம்மால் உறுதிப்படுத்தமுடியும். படுகொலைகள் உள்ளிட்ட இவ்வாறான சம்பவங்கள் எமது ஆட்சியில் மாத்திரமன்றி, கடந்த காலங்களிலும் இடம்பெற்றன. இருப்பினும் அவற்றுக்கு உரியவாறு தீர்வு காண்பது எமது பொறுப்பாகும். யார் ஆரம்பித்திருந்தாலும், அதை நாம் முடிவுறுத்து வோம். அதே போன்று சகல பிரஜை களினதும் உயிருக்கு நாம் முக்கியத்துவம் அளிக்கிறோம். அதேவேளை நாம் இப்போது சட்டவரைவொன்றைத் தயாரித்திருக்கிறோம். அதனூடாக நீதிமன்றத்துக்கு வராமல், தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையத்தில் இருந்தவாறு காணொலி ஊடாக சாட்சியமளிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படும். அத னூடாக மிகுந்த அவதானத்துக்குரிய நபர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்யமுடியும்-என்றார். (எ-இ)

## கொப்பிகள் விலை குறையுமா?

அப்பியாசக் கொப்பிகளின் விலைகளைக் குறைப்பது தொடர்பில் அரசாங்கம் துறைசார் நிறுவனங்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது. ஜனவரி மாதம் 17ஆம் திகதி, பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி என இரண்டு சுற்றுக் கலந்துரையாடல்கள் இவ்வாறு இடம்பெற்றுள்ளன.

மாணவர்க்ளுக்கு நியாய விலையில் அப்பியாசக் கொப்பிகளை வழங்கும் நோக்குடன் இந்தக் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்று பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

(ம-6)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராக கடமையாற்றும்
**ஸர்மிலா சிவநிருஷன்**
அவர்களின் அன்புத் தாய்

**சிவலிங்கம் யோகேஸ்வரி**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரி சங்கம்**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(CS/57556) J-1

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **வீரசிங்கம் செல்வநாதன்**
**(ஓய்வு நிலை இலங்கை வங்கி உத்தியோகத்தர்)**



பதினொரு ஆண்டுகள் கடந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கின்றது
உங்கள் முகம் - அப்பா
காவியமாய் வாழ்ந்தீர்கள் - உம்மை
காலமெல்லாம் நினைத்திருப்போம் அப்பா
தேனினிய உங்கள் குணம்
தேடி நாம் உருகுகிறோம்.
ஆண்டவன் காலடியில்
உங்கள் ஆத்மா என்றும்
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**உங்கள் நினைவுடன்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**
**இல 81, கலைமகள் வீதி,**
**அரியாலை, நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

பிறப்பு 25.07.1955 இறப்பு 21.02.2014

(CS/57560) J-1

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு சந்தைப்படுத்தல் பிரதிநிதி மற்றும் வழரக வாகனத்துக்கு சாரதி தேவை.

தொடர்புகளுக்கு:
**071 175 5665**

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணம், கைதடி, குருநகர்.
OIC - 1300/- , JSO - 1200/-
தொடர்பு:- **075 363 2025**

(CR/44371) J-1

## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 07.04.1951 மறைவு 16.02.2025

எமது ஆலய முன்னாள் பரிபாலனசபைத் தலைவர்
**திரு.நா.சுந்தரம்** அவர்களின்
அன்பு மனைவி


**சுந்தரம் சுபத்திராதேவி**

அவர்களின் மறைவினால் துயருற்று
இருக்கும் அவர்தம் குடும்ப உறுப்பினர்
களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா
கற்பகவிநாயகர் பாதாரவிந்தங்களை
அடைய பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை,
ஒடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம், உரும்பிராய்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 01 . 1962



மறைவு 20 . 02 . 2025

**சின்னத்தம்பி விசுவாசம்**

வடமராட்சி- பொலிகண்டியை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி விசுவாசம் (ஓய்வுநிலை அதிபர் கிளி/மட்டுவில் அ.த.க.பாடசாலை) நேற்று (20.02.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-ஈஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் பிள்ளையம்மா தம்பதியரின் பாசமிகு மூத்தமருமகனும் ஸ்ரீரஞ்சினி (ஓய்வு நிலை ஆசிரியர் யா/அத்தியார் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் வாசவன் (நீர்வேலி வாழைக்குலைச் சங்கம்-கணக்குப் பகுதி), தர்சனா (ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்), ஆகியோரின் அன்புத் தந்தையும் குகப்பிரணவி (ஆசிரியர் மு/ஸ்ரீசுப்ரமணிய வித்தியாசாலை) அவர்களின் அன்பு மாமனாரும் விக்னேஸ்வரன், சூரியகலா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஸ்ரீராங்கநாதன் (உபதபால் உத்தியோகத்தர்-செட்டியகுறிச்சி), ஸ்ரீவரதராயன் (டென்மார்க்), ஸ்ரீகரன் (ஆசிரியர்), ஸ்ரீரதி (அதிபர்),ஸ்ரீராகிணி (ஆசிரியர்), வக்சலா (ஆசிரியர்), அனோஜா (டென்மார்க்), லோஜிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), முருகசோதி, இராசேஸ்வரன் (ப.நோ.கூ.ச.முகாமையாளர்) ஆகியோரின் மைத்துனரும் வாரணன் வாரணி, பிரணவன், கோலப்பிரியன், பிருந்திகா, அஸ்வின், அகிலாஸ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் காலஞ்சென்ற துர்க்கா மற்றும் சாதனா, சர்மிகா, மதுரிகா, ஹர்சிகா, லக்ஸ்மிகன், யாதவி, மதுமி, சிந்துமி ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்


## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, உப அலுவலகம், உரும்பிராய். ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் - 08, பலாலி வீதியில், அமைந்துள்ள ஆதனத்தினை ஜெயராசா மகள் கஜானா எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆதனமானது வடமாகாணம், யாழ்மாவட்டம், பிரதேச செயலர் பிரிவு கோப்பாய் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, கோப்பாய் கோவிற்பற்று ஊரெழு இறை, கிராம அலுவலர்பிரிவு J / 267 இல், "வலப்புலமும் தோப்பும்" இதன் உறுதி இலக்கம் 2967 ஆனது பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் என்பவரினால் 2022.10.15 ஆம் திகதி எழுதப்பட்டது. இவ் உறுதி நன்கொடை உறுதியாக காணப்படுகின்றது. உறுதியில் பரப்பளவு 06 இதில் ஏற்கனவே வடக்கு பக்கமாக நன்கொடையாக கொடுத்த நிலப்பரப்பு 03 நீக்கி மிகுதி தெற்கு பக்கமாக நிலப்பரப்பு 3 இல் கிழக்கு பக்கமாக நிலப்பரப்பு இரண்டு (2) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T. Thangarajah அவர்களின் 2024.08.21 ஆம் திகதிய 13944 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு 1 என காட்டப்பட்டுள்ளது இது ஊரெழு மேற்கை சேர்ந்த நவரத்தினம் ஜெயராசாவும் பெண் பிரதீபாவும் என்பவர்களினால் அவர்களது மகளான **ஜெயராசா மகள் கஜானாக்கு** வந்தடைந்துள்ளது இதன் கிழக்கு தம்பிராசாவின் ஆதனம் வடக்கு நவரத்தினம் ஜெயச்சந்திரனுக்குரிய ஆதனம் மேற்கு இதன் மிகுதி ஆதனமான நவரத்தினம் ஜெயச்சந்திரனுக்குரிய ஆதனம் மேற்கு இதன் மிகுதி ஆதனமான நவரத்தினம் ஜெயராசாவினதும் பெண் பிரதீபாவினதும் ஆதனம் தெற்கு யோகநாதன் தர்மலிங்கத்திற்குரிய ஆதனம் ஆகும்.

நவரத்தினம் ஜெயராசாவும் பெண் பிரதீபாவும் என்பவர்களிற்கு உரெழு மேற்கை சேர்ந்த சின்னையா நவரத்தினம் என்பவரினால் வழங்கப்பட்ட நன்கொடை உறுதியான 2238 ஆம் இலக்க 08.03.2019 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் என்வரினால் எழுதப்பட்ட தாய் உறுதியில் வலப்புலமும் தோப்பும் நிலப்பரப்பு 06 இதில் ஏற்கனவே வடக்கு பக்கமாக நன்கொடையாக கொடுத்த நிலப்பரப்பு 03 நீக்கி மிகுதி தெற்கு பக்கமாக நிலப்பரப்பு மூன்று (3) இவ் ஆதனம் 1970 ம் ஆண்டு காலப்பகுதியில் தமது பெயரில் நிறைவேறிய தற்போது கைவசமற்றிருக்கும் அறுதி உறுதியின் படி தமது சொந்தமும் ஆட்சியுமானது எனவும் இவ் உறுதியானது கடந்த கால இடப்பெயர்வின் போது தொலைந்துவிட்டதாகவும் பலமுறை தேடுதல் செய்தும் அவையொன்றும் கைகூடவில்லை என வெளிப்படுத்தியுள்ளது இதற்கு முற்பட்ட உறுதிகள் எதுவும் காணப்படவில்லை.

எனவே இவ்வாதனத்தினை ஜெயராசா மகள் கஜானா என்ற பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் தகுந்த சட்டரீதியான ஆவணங்களுடன் 2025.02.08 ஆம் திகதிக்கு முன்னர் (14 நாட்களுக்குள்) சபைக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஜெயராசா மகள் கஜானா என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளையும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் விநயமுடன் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு, பிரதேச சபை,**
**புத்தூர்.**

(cs 57558) (N-1) திகதி : 2025.02.21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மொழித்தின நிகழ்வு

யாழ்., பெப். 21

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி, யாழ்ப் பாணத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில், உலகத் தாய்மொழித்தின நிகழ்வு கல்லூரி அதிபர் சி.திரிகரன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. யாழ். தமிழ்ச்சங்கத்தின் ஆட்சிக் குழு உறுப்பினரும், விரிவுரையாளருமான கவிஞர். வேல் நந்தகுமார் நிகழ்வில் சிறப்புரை ஆற்றுவார். (ச-25-66)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 22.01.2025 புதன்கிழமை
சிவபதம் அடைந்த

### பொன்னுத்துரை புஸ்பராணி

அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை இடம்பெறுவதுடன், நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.


**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**உப்புமடம் சந்தி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**குடும்பத்தினர்**
**077 803 6246**

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 28 • 08 • 1996



உதிர்வு 24 • 11 • 2024

### அமரர் சோதிலிங்கம் நிதுர்சன்

எமது ஆருயிர்ச் செல்வனின் உயிரைக்காப்பாற்ற உதவிகள் வழங்கிய நண்பர்கள். அயலவர்கள். வைத்தியசாலை வரை வந்து உதவிய நல்லுள்ளங்களுக்கும். அவரது மரணச் செய்தியறிந்து நேரிலும். தொலைபேசி மூலமும். ஊடகங்கள் வாயிலாகவும். துக்கங்களைப் பகிர்ந்தோருக்கும் மலர்வளையங்கள் வைத்தும். மலர்மாலைகள் சாத்தியும். அஞ்சலி செய்தோருக்கும். கண்ணீர் அஞ்சலிப் பிரசுராங்கள். பதாகைகள் மூலம் தங்கள் இரங்கல்களை தெரிவித்தோருக்கும். உடன் இருந்து சகல வழிகளிலும் உதவிகள் வழங்கிய உறவினர்கள். நண்பர்கள் அனைவருக்கும். இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன்.

எமது செல்வனின் நினைவாக இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை நீர்வேலி இராஜவீதியில் அமைந்துள்ள **பொன்செல்வமகால் மண்டபத்தில்** நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனநகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.


**பருத்தித்துறை வீதி,**
**நீர்வேலி வடக்கு, நீர்வேலி.**

(CS/57559) J-1

**பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 • 03 • 1945



இறப்பு 18 • 02 • 2025

### திரு. சேனாதிராஜா இராஜதிலகம்
(ஓய்வு பெற்ற பிராந்திய தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
நீர்ப்பாசன திணைக்களம், யாழ்ப்பாணம்

யாழ். இமையாணன் மேற்கு உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இடைக்காடு, தெஹிவளை 6,3/2, சார்ள்ஸ் பிளேஸை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சேனாதிராஜா இராஜதிலகம் அவர்கள் **18.02.2025** செவ்வாய்க்கிழமையன்று கொழும்பில் காலமானார் அன்னார் காலஞ்சென்ற சேனாதிராஜா – இராசம்மா தம்பதியினரின் அருமை மகனும், காலஞ்சென்ற சபாரத்தினம்-சிவகாமி அம்மை தம்பதியினரின் பாசமிகு மருமகனும், தனலட்சுமி இராஜதிலகம் (முன்னாள் உப அதிபர் கொ/இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி) அவர்களின் அன்பு கணவரும் தாரிணி (அமெரிக்கா), பாமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தன் (அமெரிக்கா), ஜெகதீஸ் (ஜெகன் – லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வேணுயன், ஹருசிகன், கார்த்திகன், அட்சரன் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் சத்தியலட்சுமி, இரவீந்திரநாதன், காலஞ்சென்ற சித்திராலட்சுமி, காலஞ்சென்ற ஜெயலட்சுமி, சுரேந்திரநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அற்புதசுந்தரி, சுப்பிரமணியம் சரஸ்வதி, முத்துக்குமாரசுவாமி, ஆறுமுகசுவாமி, சிவலோகினி, லோகநாயகி அப்புத்துரை ஆகியோரின் அன்பு மருமகனும், குமாரசுப்பிரமணியம், பராசக்தி, கந்தசாமி, மங்கையர்க்கரசி, கேசவமூர்த்தி, காலஞ்சென்ற சாந்தலட்சுமி, அன்பழகன், இந்திராதேவி, சித்திராதேவி, முரளிதரன், குமுதினி, முகுந்தன், வாகினி, ஜனனி, துஷ்யந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், மோகனாம்பாள், சண்முகராஜா, மாதினி ஆகியோரின் அன்புச் சகலரும், பவஹாரணி, நாதஸ்வரூபினி, வித்தியானந்தி, சேயோன், அரவிந்தன், சியாமளன், சரண்யன், பூஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சியாமசுந்தரன், அபிராமி, கோசலைகோபன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், கோகுல், கேசிகா, ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார். அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் **20.02.2025** வியாழக்கிழமை காலை **8** மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் **2.00** மணியளவில் கிரியைகள் நடைபெற்று மாலை **4** மணிக்கு கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள், அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மனைவி : 0718084841**
**மகள்கள் : 0112730226**
**பாமினி (மகள்) : 0761509940**

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 • 07 • 1938



மறைவு 18 • 02 • 2025

### சுப்பிரமணியம் சிவசுந்தரியம்மா

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவசுந்தரியம்மா (சிவனேஸ்வரி) கடந்த 18.02.2025 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், ஜெயதேவன், வசந்திதேவன், பிறேமதேவன், வசிகலா, சுசிகலா, சந்திரகலா ஆகியோரின் அன்புத் தாயாரும், நிவாசினி, மாலினி, அனுஷியா, சுகுமாரன், சுதாகரன், நித்தியானந்தராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், கிஷோர்க், அனுஷியா, நிருஜனா, நிலூஷா, யனோதன், பர்விதன், அஸ்விதன், தனீஸ், பிரகாஸ், அருளமுதன், கிஷானி, ஆரமுதன், ஆரணி, தனிஷிகா, கிரித்திகா, கஜானன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கீரிமலை செம்பொன்வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பன்னாலை,**
**தெல்லிப்பழை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 195 1282**
**077 435 7937**

(CS 57555) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
01
*
01
*
1936



இறப்பு
19
*
02
*
2025

## உயர்திரு. செல்லையா பொன்னுசாமி
## (S.P. சாமி)

**ஸ்தாபகர் - தினக்குரல், யாழ்.தினக்குரல்.**

**Founder, Chairm n - Northern Central Hospital (pvt) Ltd., Northern Publications (pvt) Ltd., Northern Beach H el (pvt) Ltd., S.P. Samy Investment Complex (pvt) Ltd., United Merchant Ltd.**

**முன் னாள் தலைவர் - வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்,**
**தலைவர் வடகொழும்பு இந்துபரிபாலன சங்கம்,**
**முன்னாள் உபதலைவ - அகில இலங்கை இந்துமாமன்றம், உபதலைவர் - சேர்பொன்னம்பலம் அருணாச்சலம் நம் க்கை நிதியம், முன்னாள் தலைவர் - புறக்கோட்டை வர்த்தகர் சங்கம்.**

வேலணை கிழக்கு, 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் செட்டித்தெருலேன், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பொன்னுசாமி அவர்கள் கடந்த (19.02.2025) புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான மருதையா - பாக்கியலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் வீரலட்சுமியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான நடராசா, சிவகுரு மற்றும் சபாரட்ணம், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், ராசபூபதி மற்றும் நாகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான திலகவதி, யோகவதி, சிவமணி மற்றும் மங்கையக்கரசி, காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாந்தினி, நந்தினி, கணேசராஜா, கேசவராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் இளங்கோ, ரவிசங்கர், சாந்தி, அஜந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஸ்சுருதி, சுவாதி, அபிராமி, ஆரணி, கௌதம், அஸ்வினி, ஹர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை பி.ப.4.00 மணி முதல் இல 44, செட்டித்தெருலேன், நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பார்வைக்காக வைக்கப்பட்டு நாளை மறுதினம் (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று அஞ்சலிக்கூட்டம் நடைபெறும்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இல: 44,**
**செட்டித்தெருலேன், நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொ.பே: 0777318740**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கும் இனி தலைக்கவசம் கட்டாயம்

யாழ்ப்பாணம், பெப். 21
பாடசாலை மாணவர்கள் தலைக்கவசம் அணியாமல் மோட்டார்சைக்கிள்களில் ஏற்றிச் செல்லப்பட்டால், சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பணித்துள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனிடம் தெரிவித்தார்.
வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை காலை கலந்துரையாடல் நடைபெற்றது.
இதன்போது ஆளுநர், பாடசாலை மாணவர்களை மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லும் பெற்றோர் உள்ளிட்ட எவரும் மாணவர்களுக்கு தலைக்கவசம் அணிவிக்காது ஏற்றிச் செல்வதாக முறையிடுகின்றனர். குறிப்பாக மருத்துவர்களால் இந்த விடயம் அதிகளவில் எனது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது. தலைக்கவசம் அணியாது பயணிப்பதால் ஏற்படும் விபத்துக்களில் மாணவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் என்றும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டினர். எனவே, சட்டம் ஒழுங்கைப் பேணும் வகையில் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் எவருக்கும் எதிராகவும் நடவடிக்கை எடுக்கவும். மாணவர்களை அவ்வாறு பாதுகாப்பற்ற முறையில் ஏற்றிச் செல்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை உறுதிப்படுத்துமாறு ஆளுநர் அறிவுறுத்தினார்.
இதையடுத்துக் கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், இது தொடர்பில் போக்குவரத்துப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளதாகவும், அதனை இறுக்கமாகப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார். (ம-26)

# இல்ல மெய்வல்லுனர் போட்டி!

யாழ்ப்பாணம், பெப். 21
கச்சாய் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு நிகழ்வு அதிபர் ஐ.தேவராஜன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-22-159)


## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 03 . 1946
மறைவு 20 . 02 . 2025

**தியாகராசா சுவாமிநாதன்**
(முன்னாள் பணியாளர் பாரதி பதிப்பகம், யாழ்ப்பாணம்)

தேவாலயவீதி, கூழாவடி, ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா சுவாமிநாதன் அவர்கள் நேற்று (20.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற தியாகராசா-அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் தையிட்டி, காங்கேசன்துறையை சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் தையல்நாயகியின் அன்புச் சகோதரனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சி.மகேஸ்வரன் மற்றும் ந.ரட்ணேஸ்வரி, க.குகனேஸ்வரி, ம.சர்வேஸ்வரி, க.கணேசலிங்கம், க.கைலைநாதன், க.பாலேந்திரன், க.தனேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ந.கிருஸ்ணகுமார், காலஞ்சென்ற க. இராயோகேஸ்வரர், வி.சுதாமதி ஆகியோரின் சிறிய தந்தையும் ம.இராதயன், ம.இராமகானகன் ஆகியோரின் பெரியப்பாவும், க.துவாரகன், பா.அகீபன், த.யாழோவியன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்

கூழாவடி,
ஆனைக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்.
021 225 6105
076 803 2751



## மரண அறிவித்தல்



தோற்றம் 31 . 03 . 1949
மறைவு 20 . 02 . 2025

**மார்க்கண்டு ஜெயலட்சுமி**

மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு ஜெயலட்சுமி அவர்கள் நேற்று (20.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் காலஞ்சென்ற இராஜசிங்கம்-மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும் ஜெயமாலினி, கிருஷ்ணகுமார், ஜெயசுபாஜினி, ஜெயசுபாகர் (லண்டன்), விஜேந்திரவாசன் (குட்டி), சசிகலாதேவி, கிருஷ்ணலீலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தயானந்தராசா, சிவனேஸ்வரி, நந்தகுமார், சயிதா (லண்டன்), மேகலா (கனடா), இளமுருகன், மயூரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற தங்கராசா, துரைராஜா, ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, கிருஷ்ணவேணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் யுகர்ணியா, கரிகரன், தனுஷ்கா, ஹரிஸ், டிபிகன், நேருஷன், ஹானுசன், சுவர்ணாங்கி, விகாஷ், ஆருஷ், ரித்திஷ், கனிவளவன், ரிஷிகேஷ், தர்மிகன், இளநிலா, இலக்கியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக போதி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 723 8643
077 558 2498



## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 09 . 1945
மறைவு 20 . 02 . 2025

**திருமதி கலாவதி பிரகதீஸ்வரசர்மா**
(கலா ஆசிரியை ஆசிரிய ஆலோசகர்)

நயினாதீவை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி பிரகதீஸ்வரசர்மா அவர்கள் நேற்று (20.02.2025) வியாழக்கிழமை காலை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் நயினை கைலாசநாதகுருக்கள்-ராசாம்பாமா தம்பதியின் புத்திரியும் சுருவில் நடராஜக்குருக்கள்-யோகாம்பிகை தம்பதியின் மருமகளும் கீதநந்தினி, சாய் ஜீவானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவகுமாரகுருக்கள், ஜானகி ஆகியோரின் மாமியாரும் நயினை நாகபூசணி அம்பாள் ஆலய பிரதமகுரு கைலை வாமதேவக்குருக்கள் அவர்களின் சகோதரியும் ரேவதி பிரணவக்குருக்கள், ஆகர்ஷனா, பிரவர்த்திகா, சுவாதிஷ்சர்மா, ஸ்ருதி ஆகியோரின் அன்புக்குரிய பாட்டியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை பி.ப 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து பூதவுடல் தகனத்திற்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

47/15 கலைமகள் வீதி,
2ம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு

தகவல்: குடும்பத்தினர்.
077 964 8326 (மகள்)
006 141 138 0974 (மகன்) அவுஸ்ரேலியா

(CS 2572) V-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணத்துக்கு அமைச்சர்கள் குழு மார்ச் 7 வருகிறது!

தொழிற்சாலைகள் மற்றும் தொழில் பேட்டைகள் அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக அமைச்சர்கள் குழுவொன்று மார்ச் மாதம் 7ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளது. கைத்தொழில்துறை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்சன சூரியப்பெரும ஆகிய அமைச்சர்கள் குழுவே இவ்வாறு யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளது. (அ-ம-26-66)

### கைது...

டுள்ளார். அவரிடமிருந்து 30 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத்தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அவரிடம்மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-66)

### மின்சாரம்...

ஒருவர் உயிரிழந்துள்ளார். நெல்வயலைக் கண்காணிப்பதற்காக மின்விளக்கொன்று பொருத்தப்பட்டிருந்த நிலையில், அதில் ஏற்பட்ட மின்னொழுக்குக் காரணமாகவே இந்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது என்று முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (அ-ம-113)

### வாக்குமூலம்...

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் வாசுகி சுதாகரன், வேலன் சுவாமிகள் ஆகியோரே இவ்வாறு வாக்குமூலம் பெறுவதற்காக பலாலிப் பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டனர்.

தையிட்டி விகாரையில் கடந்த 12ஆம் திகதி மேற்கொண்ட போராட்டம் தொடர்பில் விகாரையின் பிக்கு வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரால் குறித்த வாக்குமூலம் பெறப்பட்டது.

நண்பகல் 12 மணிக்கு வாக்குமூலத்துக்காக அழைக்கப்பட்ட அவர்கள், இரண்டு மணிநேரம் காத்திருக்கச் செய்யப்பட்டுள்ளனர். இதன்பின்னரே நீண்டநேரம் அவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

தெல்லிப்பழைப் பிரதேச செயலக, யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் குறித்த விகாரை அமைக்கப்பட்ட இடம் மக்களின் உறுதியுள்ள காணிகள் என்பதை அரச திணைக்களங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன என்ற விடயத்தை வாக்குமூலத்தின் போது நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கஜேந்திரன் தெரியப்படுத்தியுள்ளார். விகாரை அகற்றப்படும் வரை தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் செல்வராஜா கஜேந்திரன் பொலிஸாரிடம் கூறியுள்ளார். (அ-ம-26)

### தேசியப்..

விஜேபால தெரிவித்தார். கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் நேற்று முன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு தொடர்பில் நாடாளுமன்றத்தில் அவர் நேற்றுத் தெரிவித்ததாவது:-

'நீதிமன்றத்துக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச்சூடு தொடர்பில் கவலையடைகின்றோம். இந்தச் சம்பவம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், உரிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

சம்பவம் நடைபெற்று குறிப்பிட்ட சில மணிநேரத்துக்குள் பிரதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவர் பயணித்த வாகனத்தின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவத்துடன் தொடர்புடைய பெண்ணைக் கைது செய்வதற்குரியவிசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில் தேசியப் பாதுகாப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை. தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறும் நபர்களின் ஆட்சிகாலத்தில்தான் ஊடக நிறுவனங்கள் எரிக்கப்பட்டன. கொலைகள் இடம்பெற்றன. இவை தொடர்பில் விசாரணைகள் இடம்பெறவில்லை.

நாம் உரியவகையில் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றோம். எனவே, ஓரிரு சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு தேசியப் பாதுகாப்பு தொடர்பில் முடிவுக்குவரமுடியாது. தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குற்றமிழைத்தவர்கள் எமது ஆட்சியில் தப்பமுடியாது - என்றார். (அ-ம-44)

### கடையொன்றின்...

பட்டதுடன், கடையின் சொத்துக்களும் இரும்புக் கம்பிகளால் அடித்து உடைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிடப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-27)

### முன்னாள்...

அதிபரொருவர் உயிரிழந்துள்ளார். சி.விசுவாசம் (வயது-63) என்ற ஓய்வுநிலை அதிபரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

புலம்பெயர் தேசத்தில் இருந்து வருகை தந்த ஒருவர் வைத்த மதுவிருந்தில் பங்குபற்றியவர்கள், போதையின் உச்சத்தில் யாழ்ப்பாணம் மன்னார் வீதியால் பௌத்தமதகுருமார்கள் பயணித்த பேருந்தின் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பூநகரிப் பிரதேசத்துக்குத் தனியார் வகுப்புக்குக் கற்பிக்கச் சென்றுகொண்டிருந்த ஓய்வுபெற்ற அதிபர் மீதும், இன்னொருவர் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். தாக்குதலில் படுகாயமடைந்த அதிபரை பிரதேச மக்கள் மீட்டு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கு முதற்கட்ட சிகிச்சைக்குப் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்த நிலையில், நேற்றுக் காலை சிகிச்சையின்போது அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்திருந்த சாவகச்சேரிப் பொலிஸார், சந்தேகநபர்களாக நால்வரைக் கைது செய்துள்ளனர். இன்னொருவர் தலைமறைவாகியுள்ள நிலையில், அவரைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கைதானவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த மற்றைய நபர், மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பியுள்ளார். (அ-ம-9-26-125-28)

### சுவிஸ்குமார்...

சிறைத்தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்தது. வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.மிஹால் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று எடுக்கப்பட்டபோதே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன் படுகொலை வழக்கின் முக்கியமான சூத்திரதாரியாகக் கூறப்படும் சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை விடுவித்து உதவினார்கள் என்ற குற்றச்சாட்டில் வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன் ஆகியோருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

சுவிஸ்குமார் என்பவரை சட்டமுறையற்ற வகையில் பொலிஸ் காவலில் இருந்து விடுவிக்க உதவியதன் மூலம் தண்டனைச் சட்டக் கோவை 209ஆம் பிரிவின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றத்தைப் புரிந்தமை மற்றும் அதற்கு ஒத்துழைத்ததன் மூலம் 109ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 209 ஆம் பிரிவின் கீழான குற்றத்தைப் புரிந்தமை ஆகிய இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் இருவருக்கும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிச் சேவை ஆணைக்குழுவின் அனுமதியுடன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றிலிருந்து வவுனியா மேல் நீதிமன்றுக்கு மாற்றப்பட்டு விசாரணைகள் இடம்பெற்றுவந்தன. வழக்கின் இரண்டாவது எதிராளியான முன்னாள் உபபொலிஸ் பரிசோதகர் ஸ்ரீகஜன் வெளிநாட்டுக்குத் தப்பிச்சென்றமையால் அவரின்றியே அவருக்கு எதிரான விசாரணைகள் இடம்பெற்றன.

வழக்குத்தொடுநர் சார்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந்த் வழக்கை நெறிப்படுத்தினார். எதிரிகளான லலித் ஏ ஜெயசிங்க மற்றும் ஸ்ரீகஜன் மீதான இரண்டு குற்றச்சாட்டு களும் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் வழக்குத்தொடுநர் நிரூபித் துள்ளதால் இருவரையும் குற்றவாளிகளாக மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இருவருக்கும் தலா 4 ஆண்டுகள் தண்டனைத் தீர்ப்பளித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம். மிஹால்கட்டளையிட்டார். (அ-ம-26-66)

### நுண்ணாய்வு...

ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார். செம்மணியில் நீதிவான் நேற்று நேரடி ஆய்வில் ஈடுபட்டார். இதன்போதே, மீட்கப்பட்டவை மனித எச்சங்களா? என்பதை யாழ்.மாவட்ட மருத்துவ அதிகாரி உறுதிப்படுத்திய பின்னர், குறித்த பகுதியை நுண்ணாய்வு செய்யுமாறும், சட்ட மருத்துவ அதிகாரியால் இது தொடர்பில் அறிக்கையொன்று வழங்கப்பட வேண்டும் என்றும் நீதவான் அறிவுறுத்தியுள்ளார். இது தொடர்பான ஏற்பாடுகளை நல்லூர் பிரதேச செயலகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-ம-26)

### செம்மணி...

தன. அவற்றையே நீதிவான் நேற்று மாலை பார்வையிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் செம்மணியில் மீட்கப்பட்ட மண்டையோடு உள்ளிட்ட மனித எச்சங்கள் 1995, 1996ஆம் ஆண்டுகளில் செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களுடையதாக இருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளதாக, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றவியல் பிரிவில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் யாழ்.மாநகரசபை உறுப்பினரும், சிந்துபாத்தி மயான நிர்வாகசபை உறுப்பினருமான வை.கிருபாகரனால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்த முறைப்பாட்டுக்கு அமையவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதேவேளை, இதுதொடர்பிலான வழக்கு எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்குத் திகதியிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

### சர்வதேச...

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரி ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் எட்டு ஆண்டுகளைக் கடந்து ஒன்பதாவது ஆண்டுக்குள் செல்கின்றமையை முன்னிட்டே இந்தச் சிறப்புக் கவனவீர்ப்பு இடம்பெற்றுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகள் தெரிவித்ததாவது:-

இராணுவத்தினரின் கைகளில் ஒப்படைத்த எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? என்று வெளிப்படுத்துமாறு கடந்த எண்டு ஆண்டுகளாகக் கோரிக்கை விடுத்து வருகின்றோம். எனினும், மாறிமாறி ஆட்சியில் இருக்கும் சிங்கள அரசாங்கங்கள் எமக்கான பதிலைத் தருவதாக இல்லை. எட்டு வருடங்களாக, அதாவது கடந்த 2 ஆயிரத்து 920 நாள்களாக நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றோம். ஒன்பதாவது ஆண்டுக்குள் எமது போராட்டம் செல்கின்றது. மிக நீட்சியான இந்தப் போராட்டத்தை சர்வதேசமும் கண்டுகொள்வதாக இல்லை.

நாங்கள் நிதிகோரிப் போராட்டங்களை நடத்தவில்லை. காணாமலாக்கப்பட்ட எமது குழந்தைகளின் பிரிவையும், உறவுகளின் இழப்பையும் இழப்பீடுகளால் நிவர்த்தி செய்யமுடியாது. நாங்கள் நீதியைக் கோரியே போராடுகின்றோம். எமக்கு நீதிகிடைக்கும் வகையில் சர்வதேசம் தலையிடவேண்டும்.

உறவுகளைத் தேடிப் போராட்டத்தில் ஈடுபட்ட பலர், தமது உறவுகளைக் காணாமலேயே உயிரிழந்துவிட்டனர். எனவே, எமது நிலையை அரசாங்கமும் சர்வதேசமும் புரிந்துகொள்ளவேண்டும் - என்றனர். (அ-ம-113-125-20)


### சிவராத்திரிக்கு...

ளார். அதற்குப் பதிலாக மார்ச் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை பாடசாலை நடைபெறும் என்றும் வடமாகாண ஆளுநர் தெரியப்படுத்தியுள்ளார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CMYB

# மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 07 . 1947

மறைவு 20 . 02 . 2025

## கந்தசாமி சந்திரலிங்கம்

டச்சு றோட் உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி சந்திரலிங்கம் அவர்கள் நேற்று (20.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி-நேசமலர் தம்பதியரின் அன்பு மகனும் கிருஸ்ணபிள்ளை-நாச்சன்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னத்தங்கச்சியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சந்திரபாலன் மற்றும் சந்திரவதனி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் சர்வேஸ்வரி (ராசாத்தி),யோகேஸ்வரன் (மணி), லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் மாலினி, சண்முகலிங்கம் (பிரான்ஸ்), உருத்திரகுமாரி, சிவப்பிரகாசம், ராதை (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருஸ்ணவேணி (சட்டத்தரணி), பராபரன் (பொறியியலாளர் சிங்கப்பூர்), நீலவேணி (தொழில்நுட்ப உத்தியோகத்தர்-வவுனியா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருள்நாதன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்), யசோதினி, ஜெயகோபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்-வவுனியா பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் யனுதன், சிவனுஜன், அபிசாளினி, பபிஷாஜினி, நிவிஷன், டக்ஷாவினி, அக்ஷிதா, அபிராம் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

டச்சு றோட்,
உடுவில்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 05 . 09 . 1927

மறைவு 20 . 02 . 2025

## பொன்னம்பலம் நவரத்தினம்

**(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன பிரதம லிகிதர்)**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கோவில் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நவரத்தினம் அவர்கள் நேற்று (20.02.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - சின்னக்குட்டி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - விசாலாட்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கோமதி அம்மா அவர்களின் கணவரும், Dr.நவீனன், நளினி (சட்டத்தரணி), சாந்தினி, நிர்மலன், வசந்தி, வசந்தன், பிரபாகரன், சாந்தன், ரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பாக்கியம் பொன்னையா, நேசம்மா கந்தையா நல்லம்மா சின்னையா, பூரணம்செல்லப்பா மற்றும் செல்லம் மனுவேற்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகன்யா, கணேசயோகன் (சட்டத்தரணி), றகுநாதன், காஞ்சென்ற ஜெயபாலன், Dr. றூபவதனா, உமா, ஞானகௌரி, நிலாந்தி ஆகியோரின் மாமனாரும், Dr. துளசி, தனஞ்சயன், தனுசன், Dr. ஹறிகேஷ், றமேஸ், சர்மினி, கம்சினி, விசாலா, அனனியா, றிசான், சிவான், ஷாலினி, ஸ்ரெபான், ஜனனி, தர்மேஸ், ஹீர்த்தன், சேயோன், சங்கீதா, அமித், Dr. நிசானி, சிவானி ஆகியோரின் பேரனும் பிஜாலினி, ஐசாஜினி, ஜவாசினி, ஜலானா, சகானா, அஸ்றா, வீரன், ஆதவன் ரகு, ரகுராம் ரட்ணம், அர்சுனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (23.02.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மு.ப 10.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நவீனன் : 0044 79 514 2336
வசந்தன் : 0047 95 41 6367
பிரயா : 0047 94 23 5942
ரூபன் : 0764 85 4205
சாந்தன் : 0047 9717 8440

சிவகுரு வீதி,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்

(CR/44372) J-1

# குடும்பப்பெண் கூட்டு வன்புணர்வு குற்றவாளிக்கு 118 மாத கடூழியம்

வேலணையில் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து குடும்பப் பெண்ணொருவரைக் கூட்டுவன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றத்துக்காக பிரதான குற்றவாளிக்கு 118 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வழக்கு விசாரணைகள் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வந்த நிலையில், வழக்கின் முதலாம் எதிராளிக்கு எதிரான தீர்ப்பு நேற்று அறிவிக்கப்பட்டது. இதன்படி, குடும்பப் பெண்ணை கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தியமைக்காக, 100 மாதங்கள் கடூழிய சிறைத்தண்டனையும், வீட்டுக்குள் அத்து மீறி நுழைந்தமைக்காக 12 மாதங்கள் கடூழிய சிறைத்தண்டனையும், பெண்ணின் கணவனைத் தாக்கிக் காயம் ஏற்படுத்தியமைக்காக 6 மாதங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் என 118 மாத கடூழிய சிறைத்தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. அத்துடன் பெண்ணுக்கு இழப்பீடாக 2 லட்சம் ரூபா வழங்கவேண்டும் என்றும், அதை வழங்கத் தவறினால் 20 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிவரும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அத்துடன் குற்றப் பணமாக 50 ஆயிரம் ரூபாவைச் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

வழக்கின் இரண்டாம் எதிராளி மீதான குற்றங்கள் உறுதிப்படுத்தப்பட்டு, அவருக்கான தண்டனை கடந்த மாதம் அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-66)

**வேலையாள் தேவை**

நன்றாக உணவு சமைப்பதிலும், வீட்டை சுத்தம் செய்வதிலும் நல்ல அனுபவமுள்ள வீட்டுப் பணிப்பெண் யாழ்ப்பாணத்தில் எங்கள் வீட்டில் தங்கி வேலை செய்யத்தேவை.

**076 287 8157**

(CS/2568) J-1

**வேலையாட்கள் தேவை**

பிரபல நிறுவனத்திற்கு ஆண், பெண் வேலையாளர் தேவை.

**077 668 1670**

(CS/57554) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 07 . 1944

மறைவு 19 . 02 . 2025

## சின்னராசா நாகேஸ்வரி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னராசா நாகேஸ்வரி நேற்றுமுன்தினம் (19.02.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - ஆசைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னராசாவின் அன்பு மனைவியும், காஞ்சனாதேவி, காலஞ்சென்றவர்களான சாரதாதேவி, ரதிமோகன் மற்றும் ரவிதாஸ், ரவிச்சந்திரன் (கனடா), ரவிசங்கர் (கனடா), ஆகியோரின் தாயாரும், கதிர்காமநாதன், றட்ணரதி, கௌசி (கனடா), றாகினி (கனடா) ஆகியோரின் மாமியாரும், தீபன் (கனடா), சித்திரா (சிங்கப்பூர்), சிந்துஜா (பிரான்ஸ்), கிருத்திகா (மருத்துவபீடம் - கொழும்பு பல்கலைக்கழகம்), அகிலா (கணினி விஞ்ஞானம் - ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்), துஸ்யந்தன், காலஞ்சென்ற வர்ஷன் மற்றும் பிருந்தன், மதுஷன், அபிநயா, அபிஷா, அக்ஷயா,ஆகியோரின் பேர்த்தியும், ஆரோன், ஆரூஷ், சஹஸ்ரா, நேஹா, ஆர்யா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.02.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்மளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலைவேம்படி,
அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.
076 860 6351, 076 699 2358

(Cr/44370) (N-1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில்21.02. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.